**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 112/2020

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 4 |
| Name (திரு/திருமதி) | : | பரசுராமன் |
| Father's Name/ Husband's Name | : | ஜெயராமன் |
| Village & Taluk | : | பொன்பத்தி |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 45 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2025**

**2ம் எதிரி ஆஜர், (1 மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை நான் 29.08.2018 அன்று மாலை 04.00 மணியளவில் செஞ்சி காவல் நிலையத்தார் சண்டை வழக்கு சம்பந்தமாக பொன் பத்தி கிராமத்தில் அமைந்துள்ள பரசுராமன் மற்றும் ஹரிகிருஷ்ணன்ஆகியோர்களின் நிலங்களுக்கு அருகில் வந்து சண்டை நடந்த இடத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். அப்போது மேற்படி கையொப்பத்தை செய்தேன். என்னுடன் மூர்த்தி என்பவர் கையொப்பம் செய்தார். மேற்படி பார்வை மகசரில் உள்ள 1ம் கையொப்பம் **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடத்திற்கு அருகில் எனக்கு விவசாய நிலங்கள் உள்ளது. அ.சா.1 அம்மனி என் சகோதரி என்றால் சரிதான். அ.சா.1 யை புகார் அளிப்பதற்காக நான் காவல் நிலையத்திற்கு உடன் சென்றிருந்தேன் என்றால் சரிதான். மகசரில்

உள்ள கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் செய்தேன் என்றால் சரிதான். என்னுடன் கையொப்பம் செய்த மூர்த்தி என்பவரும் காவல் நிலையத்தில் என்னுடன் தான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். காவலர்கள் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றாலும், நான் அ.சா.1 ற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.